

27 சங்கீதம்

கர்த்தருக்கே காத்திருப்பேன் அன்பருக்கே விழித்திருப்பேன்
ஜீவனுள்ளோர் தேசத்திலே உம் நன்மையை நான் காண்பேன்
உம் வழியை போதித்து நீர் செம்மையாக என்னை நடத்தும்
என் தகப்பனும், தாயும் கைவிட்டாலும் நீர் என்னை சேர்த்துக்கொள்வீர்
ஆ.. ஆஹா.. அல்லேலூயா ஆ... ஆஹா.. அல்லேலூயா (2)

உமது முகத்தை எனக்கு மறையாதேயும்
உமது அடியேன் என்னை விலக்கிப் போடாதேயும்
உம்மையே நம்பிடுவேன் என்மேல் மனமிரங்கும்
உம்மையே தேடுவேன் என்னை ஆசீர்வதியும்

உமது கூடாரத்தில் மறைத்தென்னை காத்திடும்
உமது கன்மலைமேல் என்னை உயர்த்துமே
என் தலை உயர்த்தப்படும் என் சத்துருக்கு மேலாக
ஆனந்த பலிகளால் உம்மைப்போற்றி கீர்த்தனம் பண்ணுவேன்

உம்மிடத்தில் கேட்டேன் அதையே நான் நாடுவேன்
உம் மகிமை நான் பார்க்கவே
உம் ஆலயத்தில் நான் ஆராய்ச்சி செய்ய
என் ஜீவனுள்ள நாட்களெல்லாம் உம் ஆலயத்தில் தங்கிடுவேன்

கர்த்தர் என் வெளிச்சம் என் மீட்பர்
யாருக்கு பயப்படுவேன்?
கர்த்தர் என் பெலன் அவரே என் ஜீவன்
யாருக்கு அஞ்சிடுவேன்?

KJC-DNN

